IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT JUDGE, TENKASI.

OS.No.205/2025

Dated 04.06.2026

P.W. 1

Name : முரளிராம்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

3 முதல் 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணையின்

1ம் பிரதிவாதி எனக்கு எழுதிக்கொடுத்த சொத்தை 2ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்ததாக வழக்கு என்றால் சரிதான். 1ம் பிரதிவாதிக்கு அவரது தாயார் கொடுத்த சொத்தாகும். 1ம் பிரதிவாதி எனக்கு ஒரு பகுதி சொத்தை மட்டும் எழுதிக் கொடுத்தார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி எனக்கு எழுதிக் கொடுத்த கிரைய ஆவணம் உண்மையானதல்ல என்றும் பெயரளவிலான ஆவணம் என்றும் சொன்னால் சரியல்ல. நான் உரிய மறுபயனுக்கு சொத்தை கிரையம் பெறவில்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்த ஆவணம் மோசடியானது என்று நான் உரிமையியல் வழக்கு தொடர பதிவு சட்டம் விதி-55 மற்றும் 86-ன்படி தடை செய்யப்பட்டவர் என்றால் சரியல்ல. எனவே நான் 3ம் பிரதிவாதியை வழக்கின் தரப்பினராக சேர்க்க இயலாது என்றும் 3ம் பிரதிவாதியை அவசியமற்ற தரப்பினராக சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி பதிவு செய்யப்படாத ஒப்பந்தம் செய்துகொண்டார் என்று கூறுவது வழக்கிற்காக கூறும் பொய் என்றால் சரியல்ல. நான் வழக்கில் அவசியமற்ற தரப்பினர்களை சேர்த்துள்ளேன் என்றும் 3 முதல் 6 பிரதிவாதிகளுக்கெதிராக எந்த பரிகாரமும் கிடைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை**

BALUCHAMY RAJAVEL

Digitally signed by BALUCHAMY RAJAVEL
Date: 2026.06.04 17:35:04 +0530